**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,
KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 339/2024 |
| Deposition of witness for | Prosecution : LW 7 / PW 3 |
| | Defence : |
| | Court : |
| Name : பச்சையப்பன் | Father's Name: மண்ணார் |
| | Husband Name: |
| Village: சோமாசிபாடி | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.06.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை** :

நான் சோமாசிபாடி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை சோமாசிபாடி பஸ் ஸ்டாப் அருகில் உள்ள ஒரு டீகடையில் நான் நின்றுக்கொண்டிருந்த போது இறந்த காசி அவரது வண்டியை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி தள்ளிக்கொண்டு வந்திருந்தார். அப்போது கிழக்கில் இருந்து மேற்காக வந்த காரானது மேற்படி காசியின் மீது மோதியதில் காசி கீழே விழுந்துவிட்டார் அவருக்கு தண்ணீர் கொடுத்து மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். நான் மருததுவமனைக்கு செல்லவில்லை. மேற்படி கையொப்பத்தை நான் பஸ் ஸ்டாப்பில் வைத்து மறுநாள் காலை போலிசார் வந்து விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் 2வது கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

இறந்த காசி எனக்கு என்ன சொந்தம் என்றால் சித்தப்பா ஆவார். நான் அந்த கையொப்பத்தை பார்வை மகசரில் விபத்து நடந்ததாக

சொல்லப்படும் மறுநாள் தான் போட்டேன் என்றால் சரிதான். அதில் நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேனா என்றால் வேலு என்பவரும் கையொப்பம் செய்தார். என்னிடம் வெள்ளைப்பேப்பரில் தான் கையொப்பம் பெற்றார்களா என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/- M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,
KILPENNATHUR.

Calender
Deposition of witness for

Case No. : CC 339/2024
Prosecution : LW 5 / PW 2
Defence :
Court :

Name : சக்திவேல்
Father's Name: அண்ணாமலை
Husband Name:
Village: சோமாசிபாடி
Taluk :
Caste :
Calling :
Religion:
Age : 43

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.06.2025

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் சோமாசிபாடி கிராமத்தில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். அ.சா.1 முருகனை தெரியும். அ.சா.1ன் தகப்பனார் இறந்த காசியைத் தெரியும். 11.02.2023ம் தேதி சுமார் 07.00 மணியளவில் காசி கிருஷ்ணா பேக்கரி எதிரில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சின்ன இருசக்கர வாகனத்தை தள்ளிக்கொண்டு சென்ற போது கார் ஒன்று கீழ்பென்னாத்தூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கிவந்து காசி மீது மோதிவிட்டது. மேற்படி கார் எண் எதுவும் எனக்கு தெரியாது. அதன் பின்னர் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். மேற்படி சம்பவத்தை நான் சுமார் 30 அடி தூரத்தில் இருந்து கண்டேன். நான் அங்கிருந்து செல்வதற்கு அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் நான் வீட்டிற்கு வந்த பின்னர்தான் காசியின் உடலை சென்று பார்த்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

**(அரசுத் தரப்பு சாட்சி பிறழ்சாட்சியம் அளித்ததால் சாட்சியினை குறுக்கு விசாணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை)**

இந்த வழக்கில் இறந்த காசி என்பவர் எனது பெரியப்பா என்றால் சரிதான். எனது பெரியப்பா காசி வேலூர் அரசு மருத்துவமனையில் 17.02.2023ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். இது சம்மந்தமாக 17.02.2023ம் தேதி கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் வேலூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிடம் வந்து என் பெரியப்பாவின் பிரேதம் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு அதில் நான் சாட்சியாக இருந்தேன் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை</u>**

இறந்து போன நபர் எனது பெரியப்பா என்பதால் சம்பவத்தை 30 அடி தூரத்தில் இருந்து பார்த்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/- M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

Calender
Deposition of witness for

Case No. : CC 339/2024
Prosecution : LW 1 / PW 1
Defence :
Court :

Name : முருகன்
Father's Name: காசி
Husband Name:
Village: சோமாசிபாடி
Taluk :
Caste :
Calling :
Religion:
Age : 49

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.06.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை** :

நான் சோமாசிபாடி கிராமத்தில் வசித்து பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்த காசி எனது தந்தையாவார். கடந்த 11.12.2023 அன்று மாலை 05.00 மணியளவில் எனது தந்தை கீழ்பென்னாத்தூர்–திருவண்ணாமலை ரோட்டில் டீ சாப்பிட்டு வர தனது இருசக்கர வாகனம் TVS Super XL –ல் கிருஷ்ணா பேக்கரி அருகில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி தனது இருசக்கர வாகனத்தை தள்ளிக்கொண்டு குறுக்கே சென்றபோது கீழ்பென்னாத்தூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கி வந்த கார் ஒன்று வந்து எனது தகப்பனார் மீது மோதிவிட்டது, மோதியதில் எனது தந்தைக்கு இரண்டு கால், இடது கை, பின் பக்க தலையில் பலத்த அடிப்பட்டது. பின்னர் அதே காரிலேயே எனது தகப்பனாரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தாக தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் தான் அந்த புகாரை கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு சிகிச்சைப்

பலனின்றி எனது தந்தை 17.02.2023 அன்று எனது தந்தை இறந்துவிட்டார். பின்னர் மேற்படி பிரேதத்தை பிரேத விசாரணை செய்த பின்னர் காவல் ஆய்வாளர் ஒப்படைத்தார் நான் பெற்றுக்கொண்டேன். மேற்படி எனது தகப்பனாருக்கு விபத்து ஏற்படுத்திய நபர், பெயர், ஊர் எதும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்குவிசாரணை

எனது தகப்பனார் விபத்தில் அடிப்பட்டு சம்மந்தமாக எனக்கு போனில் தகவல் வந்த பின்பு தான் நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் எண் மற்றும் எதிரியின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி விபத்து ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் இடத்தின் இருபுறத்திலும் கடைகள் வீடுகள் உள்ள பஜார் தெரு என்றால் சரிதான். தந்தைக்கு விபத்து ஏற்படுத்தியதற்காக நஷ்ட ஈடு கோரி நான் மனுதாக்கல் செய்து நஷ்ட ஈடு பெற்றுவிட்டேனா என்றால் இன்னும் நஷ்ட ஈடு பெறவில்லை. புகாரில் உள்ள வாசகங்களை நான் எழுதவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/- M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்